**Principal District Munsif Court, Sankarankovil.**

தேதி : 26.06.2024

அ.வ.எண்.71/2020

வா.சா.1–செல்லப்பா, த/பெ.கிருஷ்ண நாடார்

வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

1. எனக்கு பூர்விகம் பாண்டியாபுரம் ஆகும். நான் என்ன வேலை செய்தேன் என்றால் விவசாயம் செய்து வந்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரத்தை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி ஜெயசங்கரி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன விபரம் சொல்லியுள்ளார் என்று வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். எனது வழக்குரை 5 வது பாராவில் பஞ்சாட்சரம் என்பவருக்கு 3 ஆண்மக்கள், 2 பெண்மக்கள் உள்ளார் என்றால் சரிதான். பஞ்சாட்சரம் மகன் கனகராஜ் என்பவர் பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறார். பஞ்சாட்சரம் மகன் ஐயப்பன் பாண்டியாபுரத்தில் வசிக்கிறார். மற்றொரு மகன் பாவாடை என்பவரும் பாண்டியாபுரத்தில் தான் வசித்துவருகிறார்.

2. எனது சகோதரி பராசக்தியின் கணவர் பெயர் தெரியாது. அவரது கணவர் உயிரோடு இல்லை. அவருக்கு குழந்தை உள்ளதா என்றால் குழந்தை எதுவும் இல்லை. வழக்கு போட்டுள்ள சொத்துக்கு எனது பெயரிலோ எனது தாத்தா பெயரிலோ ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, உள்ளது. நான் அதற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். 6ம் பிரதிவாதி ஜெயசங்கரி என்பவர் 7ம் பிரதிவாதிக்கு கடன் பாதுகாப்பு வழங்கி 22.03.2013ம் தேதியில் கிரைய ஆவணம் எழுதிவைத்துள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விபரம் 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் பற்றி எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி வழக்கு சொத்தானது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என வழக்கில் கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உரிமை குறித்து பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோராமல் வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. குடும்ப உறுப்பினர்களான பஞ்சாட்சரத்தின் வாரிசுகள் மற்றும் பராசக்தி ஆகியோரின் வாரிசுகளை நான் தரப்பினர்களாக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பஞ்சாட்சரம் மற்றும் பராசக்தியின் வாரிசுகள் இந்த வழக்குக்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 6ம் பிரதிவாதி ஜெயசங்கரியின் தாத்தாவான சங்கரபாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சங்கரபாண்டி மேற்படி சொத்தினை 07.09.1977ல் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் மூலம் 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஆவணமானது நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முன்பே ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையிலான 6ம் பிரதிவாதி கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

5. நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிருஷ்ணசாமி பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது தகப்பனார் பெயர் கிருஷ்ண நாடார் ஆகும். கிருஷ்ண நாடார் பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறாக ஏற்பட்ட பட்டாவை நீக்கம் செய்ய மேற்படி கிருஷ்ண நாடார் எழுத்துமூலமான வாக்குமூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், எனது வழக்கானது 6ம் பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.